முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் திருமங்கை ஆழ்வார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

16.01.2019, புதன்கிழமை

1. **அருட்குருவே அரங்கா வாழ்க**
**ஆற்றலாய் தரும சக்தியாக**
**அருட்சுடராக வந்த அண்ணலே**
**அகிலமதில் அரங்கனுன் பெருமை கூறி**

2. கூறியே ஒளி சூட்சும நூலை
குறையிலா **விளம்பி கலை திங்கள்**
**தெரியவே உபய திகதி புந்தி வாரம்**
**(விளம்பி வருடம் தை மாதம் 2ம் நாள் 16.01.2019, புதன்கிழமை)**
**தேசிகனுக்கு திருமங்கை ஆழ்வார் யானும்**

3. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர்வான தரும நெறியை
ஞானவழியாக பின்பற்றி வருக
நம்பிக்கை கொண்டு பெண்களும் வருக

4. வருகவே அரங்க மகானிடம் ஆசி
வல்லமையான தீட்சையும் பெற்று
முருகா என வழிபாடுகள் தொடர
முழுமை பெறும் ஞானிகளை தரவல்ல

5. தரவல்ல சக்திகளாக பெண்களிருக்க
தங்களை உண்மை நெறி வழி
தரமான சுத்த சைவம் ஏற்பதுடன்
தேக மனோபலம் அடையும் வண்ணம்

6. வண்ணமுடன் ஞானநூல்களை பயின்று
வளமுற தேகபலமுற குரு ஆசி பெற்று
எண்ணம் வழி சத்தான ஆகாரம்
இனிதே உண்டு கொண்டுமே

7. கொண்டுமே கர்ப்ப காலங்களில்
கோபம் வஞ்சமிடர் எண்ணமிலா
தொண்டு மனப்பான்மைபட
தருமங்கள் மிகுதி செய்து கொண்டு

8. கொண்டுமே ஞானிகள் பெருமக்களை
கும்பிட்டு நித்ய பூசை செய்தும்
தொண்டுபட வாழ்க்கை நடத்தி
தேசிகனார் ஞானிகள் பூசை கலந்து

9. கலந்து ஆசி பெற்று வருவதுடன்
கருணைமிகு அரங்கன் தருமம்
பலமான அருளமுதாக இருக்க
பணிந்து உண்டு வருதலுற

10. வருகவே பெண்கள் யாவரும்
வல்லமைபட ஞானி ஆவதுடன்
பெருமைமிகு ஞான சேய்களையும்
பெற்றெடுத்து பேருபுகழ் அடைவர்

11. புகழ் தரும் அரங்க ஞானியர் மூலம்
பெண்களுக்கும் முக்தி வாய்ப்பிருக்க
வகைபட ஞானியரை ஏற்று
வணங்கிவர கலியுகமே மாறும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் திருமங்கை ஆழ்வார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

அளவிலாது அருள்பலம் பெற்றிட்ட அருட்குருவே ஆறுமுக அரங்கமகா தேசிகனே வாழ்க வாழ்க. எல்லையில்லா ஆற்றலாய் தருமத்தின் சக்தியாக அருட்பெருஞ்ஜோதி சுடராக வந்துதித்த அவதார ஞானியே அண்ணலாக இவ்வுலகினில் வந்துதித்த அரங்கமகாதேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் தை மாதம் 2ம் நாள் 16.01.2019, புதன்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே திருமங்கை ஆழ்வார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் திருமங்கை ஆழ்வார்.

எல்லா நன்மைகளையும் தந்தருளும் உயர்வான தருமத்தின் நெறியினை ஞானவழியாக மக்களெல்லாம் பின்பற்றிட வேண்டும். தருமநெறியிலே நம்பிக்கையுடன் பெண்களும் கடைப்பிடித்து வருவதுடன் தர்மத்தின் தலைவன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரிடத்து பயபக்தியுடன் பணிந்து தீட்சை உபதேசம் அடைந்து வல்லமைகளை பெறுவதுடன் ஞானத்தலைவன் முருகப்பெருமானை மனம் உருகி முருகா முருகா முருகா என வழிபாடுகள் செய்தும் வர வேண்டும்.

முற்றுப்பெற்ற ஞானிகளை இவ்வுலகிற்கு தந்தருளும் சக்திகளாக பெண்கள் இருக்கின்றபடியினாலே ஞானிகளை பெற்றெடுக்கும் தாயாக பெண்கள் இருப்பதினாலே அவர்களெல்லாம் உண்மை நெறியின் வழியில் சென்று கொள்கைகளை கடைப்பிடிப்பதுடன் உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்து சுத்த சைவத்தை மேற்கொண்டு உடல் பலம் பெறும் வகையிலும் மனோபலம் பெறும் வகையிலும் நல்ல ஞானநூல்களை பயின்று வளமான தேகபலம் பெற்றிட உத்தமமகா ஞானி ஆறுமுக அரங்கனிடத்து அருளாசிகளைப் பெற்று சிந்தையில் முருகப்பெருமானை வைத்து சத்துள்ள ஆகாரங்களை இனிதே உண்டு வருவதுடன் ஞானச்சேய்களை பெற வேண்டியிருப்பதினாலே கர்ப்பகாலங்களில் கோபம், வஞ்சம், இடர் செய்யும் எண்ணங்கள் ஏதும் இல்லாமல் தொண்டு மனப்பான்மையுடன் தருமங்களை அதிகமாக செய்து தினம்தினம் மறவாமல் ஞானிகளின் திருவடிகளைப் பற்றி பூஜைகள் செய்தும் வர வேண்டும்.

தம்மால் இயன்ற அளவு தொண்டுகளை செய்வதுடன் வாழ்க்கை நடத்தி உலக நலன் கருதி அரங்கமகா தேசிகனார் நடத்தும் ஞானபூஜைகளிலே கலந்து ஆசி பெற்று வருவதுடன் கருணையே வடிவான அரங்கன் செய்கின்ற தருமங்களில் கலந்து அரங்கன் அளிக்கும் ஞானஅமுதாகிய குடில் உணவை பணிந்து உண்டுவர வேண்டும்.

இவ்விதமே செய்து வரவர, பெண்கள் யாவரும் வல்லமையுடன் ஞானி ஆவதுடன் வல்லமைமிக்க பெருமைமிக்க ஞானகுழந்தைகளையும் பெற்றெடுத்து பேர்புகழை அடைந்து சிறப்பார்கள்.

எல்லையில்லா புகழ்மிக்க அரங்கமகா தேசிக ஞானயோகியர் மூலமாக பெண்களுக்கும் முக்தியடையும் வாய்ப்பு இருக்கின்றதப்பா. ஆதலால் அனைவரும் அரங்கமகா தேசிக மகா ஞானியரை மனமார குருவாக ஏற்று வணங்கி வரவர, இந்த கலியுகமே மாற்றமடைந்து ஞானயுகமாக ஆகிடுமப்பா என மகான் திருமங்கை ஆழ்வார் உரைக்கின்றார்.

–சுபம்–